**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.33**
**Defence**
**Court**

**Name : மாரியப்பன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **01.02.2023**

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசியில் மேலக்கடைய நல்லூரில் குடியிருந்துவருகிறேன். நான் இரும்பு கொல்லுப்பட்டரை வைத்துள்ளேன். நான் விவசாய வேலைக்காக மண்வெட்டி, கொடாரி, அரிவாள் செய்துகொடுப்பேன். வழக்கின் எதிரிகளை தெரியாது. மொத்தமாக என்னிடம் அரிவாள் மற்றும் விவசாய பொருட்கள் செய்து தரும்படி

கேட்பார்கள். 2007 ம் ஆண்டு என்னிடம் அவ்வாறு யாரும் கேட்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் போட்டோ எதுவும் காட்டவில்லை.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னை 2007 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் போலீசார் விசாரித்தபோது சுதந்திர தினத்திற்கு 10 தினங்களுக்கு முன்னதாக அம்பாசிடர் காரில் மொட்டை போட்ட ஒரு நபரும், அவருடன் 30 வயது மதிக்கத்தக்க மற்றொரு நபரும் மேலக்கடைய நல்லூருக்கு வந்து சுமார் 1 ½ அடி நீளத்தில் ஒரே அளவில் 15 அரிவாள் வேண்டும் என்றும் பேரம்பேசி 90/-ரூபாய் என்று நிர்ணயித்து மறுநாள் வந்து வாங்கி கொள்வதாக கூறிச்சென்றார்கள் என்றும் அவ்வாறு கூறியபடி மறுநாள் வரவில்லை என்றும் ஆனால் மொட்டைபோட்ட நபருடன் வந்திருந்த மற்றொருவரும் வேறு ஒருவரும் என்னிடம் பணத்தை கொடுத்துவிட்டு நான் செய்துவைத்திருந்த 15 அரிவாளை வாங்கி கொண்டு சென்றார்கள் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தென்காசியில் ஒரு பிரச்சனை ஏற்பட்டு கொலைகள் நடந்ததாக கேள்விப்பட்டேன். யார்யாருக்கிடையே கொலை நடந்தது என்று தெரியாது. மொட்டைபோட்ட நபர் ஒருவரின் புகைப்படத்தை என்னிடம் போலீசார் காட்டினார்கள் என்றும் நான் அவர்களிடம் அரிவாள் செய்ய சொல்லி எனக்கு ஆடர் கொடுத்த நபர் இவர்தான் என்று போலீசாரிடம் அடையாளம் காட்டினேன் என்றும் போலீசார் அவரை செந்தில் என்று கூறியதை தெரிந்துகொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில்

கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அரிவாள் செய்து கொடுப்பது தொடர்பாக பதிவேடு எதுவும் பராமரிப்பதில்லை. உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்களை தயாரித்து விற்பது தவறு என்று எனக்கு தெரியாது. அவ்வாறு தயாரித்து விற்பதாக இருந்தால் அதுபற்றிய ஆவணங்களை முறையாக பராமரித்து பாதுகாக்க வேண்டும் என்று எனக்கு தெரியாது. கூடுதலாக பணம் கொடுப்பவர்களுக்கு ஆயுதங்களை தயாரித்து கொடுப்பது எனது வழக்கம் என்றும் அந்த வகையில் மொட்டை போட்டு வந்திருந்த செந்தில் என்பவர் மொத்தமாக கேட்டதால் ஆயுதங்களை தயாரித்து கொடுத்தேன் என்றும் அந்த ஆயுதங்கள் குற்றச்செயலுக்கு பயன்பட்டதால் தற்போது அது பற்றி எனக்கு பிரச்சனை எதுவும் ஏற்பட்டு விடும் என்று பயந்து 2007 ம் ஆண்டு மொத்தமாக அரிவாள் செய்துகொடுத்த விபரத்தையே மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டு தென்காசியில் இந்துக்களும் இஸ்லாமியர்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தில் நான் தயாரித்து கொடுத்த அரிவாள் பயன்படுத்தப்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும் அதனால் தான் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**